ஆர்ப்பாட்டமும் செய்யவில்லை. 'பகவானே! என்ன இந்த கெதிக்கு ஆளாக்கிப்புட்டியே!' என்றவாறு மௌனமாக உட்கார்ந்திருந்தார். மழை விடாது பெய்தாலும் சிவஞானத்தின் சாவுக்கு எழவு கட்ட வந்த கூட்டத்திற்குப் பஞ்சமில்லை.

சிவஞானத்தின் தாலியை விற்றுத் தனபாக்கியத்திற்காக முதன் முதலாக ஒரு பசுமாடு பிடித்தார். மகளுடைய நிழலுருவம்தான் கிழவரின் கண்ணில் எப்போதும் படிய வேண்டும். அவர் எங்கு சென்றாலும் தனபாக்கியமும் கூடவே இருப்பாள். அவளைப் பசி யறியாது வளர்த்தார். அவளுடைய விருப்பப்படிதான் எல்லாமும் நடந்தது.

கிழவருக்குத் தூக்கம் கலைந்து எழுந்து உட்கார்ந்து எதை யெதையோ நினைத்துப்பார்த்தவர் கடைசியில் 'பகவான் கைதூக்கி வுடுவான்தான். எல்லாம் அவன் சித்தம்' என்று நினைத்துக்கொண் டார். தனபாக்கியத்துடன் இப்போது ஆறுமுகத்தின் நிழலுருவமும் கிழவரின் மனத்தில் சேர்ந்துகொண்டிருந்தது. அவனை என்ன செய்ய லாம்? அவன் என்னவாக வருவான்?

கிழவர் தனபாக்கியத்தை எழுப்பி நொச்சி வெட்டக் கிளம்பு வதாகச் சொல்லி பரணில் இருக்கும் அலக்குத் தடியையும் வாங்கை யும் எடுத்துவரச் சொன்னார். தனபாக்கியமும் ஆறுமுகமும் பூத் துறைக்கு வந்த இந்த ஒரு மாதமாக அவர் கூடை பின்னவில்லை. அவர்கள் இருவரையும் பார்த்துக்கொண்டே இருந்துவிட்டார். அவள் வாங்கையும் அலக்கையும் எடுத்து வந்து கொடுத்து 'விடிஞ்சப் புறம் போனா என்னா? குளுந்த காத்துக்குப் பாம்பு பூச்சி வழியில் வந்து கெடக்குமே' என்றாள். சத்தம் கேட்டு விழித்த ஆறுமுகம் 'நானும்மா' என்றான். 'முடியாது. நான் அனுப்பமாட்டன். சொல் பேச்சு கேளு' என்றவள், அடம்பிடித்து அழுது கிழவருடன் போக முயன்ற ஆறுமுகத்தைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டாள். ஆறு முகத்தின் அழுகை அதிகமாகவே, கிழவர் சொன்னார்: 'அவன் ஆளாவணும். ரொம்பப் பெரிய ஆளா நீதான் அவன செய்யணும். நான் இனிமே வெறும் சும்மாதான். காலியான குடுக்கதான். ஒனக்கு இவன்தான் சொத்துபத்தெல்லாம். இவனோட நெய எப்பவும்

கண்ணுலயும் நெஞ்சுலயும் இருக்கணும். ஒனக்கு இதான் நான் சொல்லுவன். எல்லாத்துக்கும் கடவுள்னு ஒருத்தன் இருக்கான்.'

கிழவர் நெருங்கி வந்து தனபாக்கியத்தைப் பார்த்தார். அவளுடைய கண்களில் நீர் நிறைந்து நின்றது தெரிந்ததும் அவளுடைய தலையில் கையை பயத்துடன் வைத்தார், ஆசீர்வாதம் செய்வதுபோல். அவள் சட்டென்று நெஞ்சுடன் கைகளை கோத்துக் கட்டிக் கொண்டு எழுந்து நின்றாள். கிழவர் ஆறுமுகத்தின் கையைப் பிடித்துக் கொண்டு தெருவில் இறங்கினார். 'அப்பாவ், பார்த்துப் போ. நேரத்திலே சோறு குடிக்க வந்துடு. பொயித மறந்துப்புட்டு வேலை பார்க்காத' என்று சொன்ன தனபாக்கியம், கிழவருடன் இணைந்து பெரிய ஆள்போல் நடந்துபோகும் ஆறுமுகத்தையே பார்த்துக் கொண்டு சற்று நேரம் நின்றிருந்தாள்.

கிழவர் கால்களை எட்டிஎட்டி வைத்து வேகமாக நடந்தார். கிழவருடைய நடைக்கு ஆறுமுகத்தால் ஈடுகொடுக்க முடியவில்லை. சிறிது தூரம்வரைதான் கிழவருடன் இணையாக வருவான். பிறகு பின்தங்கிவிடுவான். 'தாத்தாவ், நில்லு, நானும் வரன். என்ன வுட்டுட்டு வுட்டுட்டு ஓடறியா? வா, ஒன்னெ எங்கம்மா கிட்டெ சொல்லி திட்டு வாங்கிவைக்கிறன்' என்று கத்திக்கொண்டே ஓடிவந்து முன்னே நடந்த கிழவருடன் இணைந்து நடப்பான். சிறிது தூரம்வரைதான் அவனால் ஜோடியாகக் கிழவருடன் நடக்க முடியும். அவ்வப்போது வேடிக்கை பார்த்ததால் அடிக்கடி கிழவரிடமிருந்து பின்தங்கியேபோனான்.

கிழவர் வவ்வா ஓடைக்கரையில் இறங்கினார். தொலைவில் குட்டையாகத் தேங்கி நின்ற நீரில் வாங்கின் கைப்பிடியில் கட்டக் கொண்டுவந்த கயிற்றை நனைத்துவரச் சொல்லி ஆறுமுகத்திடம் கொடுத்தார். கருங்கல்லை அடைப்பில் தேடினார். சிறிய கல்தான் கிடைத்தது. மணலில் நாய்க்குந்தலில் உட்கார்ந்து வாங்கைத் தீட்டினார். இடது கையின் ஆள்காட்டி விரலால் சுரணையைத் தடவிப் பார்த்துத் தீட்டினார். ஆறுமுகம் நனைத்துக்கொண்டு வந்த கயிற்றை வாங்கி வாங்கின் கைப்பிடிப் பகுதியில் பிரிமணை சுற்றுவதுபோல் இறுக்கமாகச் சுற்றிக் கட்டினார். மை வித்தை காட்டுபவனிடம் மயங்கி வியப்பிலாழ்ந்து நிற்பவன்போல ஆறுமுகம் கிழவரையே பார்த்துக் கொண்டிருந்தான். முக்கியமாக அவருடைய வலது புஜத்தின்

மேற்பகுதியில், பச்சைகுத்தியிருந்த ஏதோ ஒரு காட்டுச் செடியின் பூவும், இடது கையில், கொத்த வருவதுபோல் இருந்த பாம்புப் படமும்தான் அவனை ஈர்த்தன.

நொச்சிச் செடி இருக்கும் இடத்தைத் தேடி ஓடையின் இரு கரைகளிலும் பார்த்துக்கொண்டே கிழவர் நடக்க, அவருடன் ஆறு முகம் ஓடையை ஆச்சரியமாகப் பார்த்தவாறு நடந்தான். கிழவரின் உடலமைப்பு, நடை, சிரிப்பு, பேச்சு என்று எல்லாமும் அவனுக் குப் பிடித்திருந்தது. முக்கியமாக வலது கையில் வரைந்திருந்த காட்டுச் செடியின் பூதான் ரொம்பப் பிடித்திருந்தது. எல்லாவற்றையும்விட ஓடைதான் அதிகம் அவனுக்குப் பிடித்திருந்தது. கிழவர் அவனிடம் அதிகம் பேசாதது மட்டும்தான் அவனுக்குப் பிடிக்கவில்லை. 'அம்முகள்ளி' என்றான். அவன் பூத்துறைக்கு எத்தனையோ முறை இதற்கு முன்பு வந்து ஒரு வாரம், பத்து நாள் என்று தங்கியிருக்கி றான். அப்போதெல்லாம் அவனைத் தெருவில் விளையாடக்கூட விட மாட்டார்கள். ஓடைக்கு ஒருநாளும் ஒருவரும் அவனைக் கூட்டிக்கொண்டு வந்ததில்லை. இன்றுதான் கிழவர் அழைத்துக் கொண்டு வந்திருக்கிறார்.

ஈச்சம் புற்று, கிளாத்திட்டு, சோற்றுக் கற்றாழை, வேப்ப மரம், வேல மரம் என்று எவ்வளவோ செடிகளும் கொடிகளும் மரங்களு மாக ஓடைக்கரை அடர்ந்த புதராக இருந்தது. புற்றுக்குப் பக்கத்தில் ஈச்சங்குத்தை ஒட்டியிருந்த நொச்சியைக் கண்டதும் கிழவர் நின்றார். அவருடைய முகம் விரிவது போலவும் கண்கள் சிரிப்பது போலவும் இருந்தது. லேசாகச் சிரித்துக்கொண்டே 'மர்மர்' என்று சத்தம் வரும் ஆணியடித்த கனத்த செருப்பைப் போட்டுக்கொண்டு நொச்சிக் குச்சி நின்றிருந்த இடத்திற்குச் சென்று, நொச்சியை வெட்டுவதற்குத் தடையாக இருக்கும் செடிகளை எப்படி வெட்டுவது என்று பார்வை யிட்டார். முதலில் நீட்டிக்கொண்டிருந்த செடிகளை வெட்டினார். பிறகு நொச்சிக் குச்சியைச் சுற்றியுள்ள எல்லாக் காட்டுச் செடிகளை யும் ஒவ்வொன்றாக வெட்டிப்போட ஆரம்பித்தார். ஒன்றிரண்டு செடிகளை அடிவேரில் வாங்கைக் கொடுத்து இழுத்துப் போட்டார். சோற்றுக் கற்றாழையை வேரோடு பிடுங்கியெறிந்தார். கிழவரின் பக்கத்தில் போக ஆறுமுகம் முயன்றபோதெல்லாம் தேள் கடித்தவர்

போல் சத்தம்போட்டுக் கத்தினார். ‘தூரமாவே நில்லு, எட்டவே நில்லு, சொல் பேச்சுக் கேளு. கண்ணுல காதுல பட்டுடும். எட்டவே தள்ளி நில்லு, இது வெளயாட்டு இல்ல. கண்ணு நொள்ளயாப் போயிடும். புள்ளக்காரிக்கு யாரு பதிலு சொல்றது? போடா அந்தாண்ட.’

கிழவர் நொச்சிக் குச்சிகளை வெட்டி ஓடையின் மையத்தில் எறிய ஆரம்பித்தார். ஒழுங்கில்லாமல் சிதறி விழும் குச்சிகளைத் திரட்டி ஒன்றாக்க முயன்ற ஆறுமுகத்தைக் கிட்டே போகக் கூடா தென்று திட்டினார். ‘கண்ணுல குத்தும், தலை பொத்துடும், கை காலுல செதம்பு ஏறிடும்’ என்று ஓயாமல் கத்திக்கொண்டேயிருந் தார். மீறியும் அவன் குச்சிகளைத் தொடுகிறானா என்று பார்த்துக் கொண்டே ஓடையின் மணலில் குச்சிகளை வெட்டிவெட்டிப் போட்டுக்கொண்டிருந்தார்.

முன்பு அடர்ந்த புதராக இருந்த இடம் இப்போது வெறிச் சோடி, உடைக்கப்பட்ட மண்சட்டியைப் போல் அலங்கோலமாக அசிங்கமாக இருந்தது. வெட்டிச் சாய்த்த முள் செடிகள் ஒன்றின் மேல் ஒன்றாகத் தாறுமாறாக விழுந்து கிடந்தன. ஓடைக்கரையிலும், கரைக்குப் பின்புறமும் வெட்டப்பட்ட செடிகள், பிடுங்கப்பட்ட கற்றாழைகள் நொறுங்கி விழுந்து பிசின் போன்ற திரவத்தை வழியவிட்டு வதங்கிக்கிடந்தன.அந்தக் குத்தை வெட்டி முடித்ததும் கிழவர் கரையை விட்டு வந்து மணலில் தாறுமாறாகச் சிதறிக் கிடந்த குச்சிகளைக் குவித்துப்போட்டுத் தழையை வாங்கால் உதிர்க்கத் தொடங்கினார். முதிராத குருத்துப் போன்ற முனைக்குச்சிகளைச் சீவித்தள்ளினார். வாங்கு ஒவ்வொரு முறையும் காற்றை வெட்டிய லகுவில் திரும்பத்திரும்ப வெட்டிக்கொண்டிருந்தது. இலைகளும் குச்சியின் முனைக் குருத்துகளும் வாங்கு பட்டதுமே இறகு போல எம்பிக் குதித்து சிதறி மணலில் குவிந்துகொண்டிருந்தன.

‘நாளக்கி நானும் ஒரு வாங்கு எடுத்தாருவேன்.’

‘எதுக்கு?’

‘நீ வெட்டிப்போட வெட்டிப்போட, நான் எலய செரப்பேன்.’

‘சரிதான்.’

‘நாளக்கி என்ன கூட்டிக்கிட்டு வருவயில்ல.’

'ஆமாம்.'

'சத்தியமா?'

'சத்தியமா.'

'எங்கம்மாமேல சத்தியமா?'

'சத்தியமா.'

'ஏமாத்துவியா?'

'இல்ல.'

'. . .'

ஆறுமுகத்துடன் கிழவர் பேசிக்கொண்டிருந்தாலும் வேலையை நிறுத்தாமல் செய்துகொண்டேயிருந்தார். வெட்டிப்போட்டிருந்த நொச்சிக்குச்சிகளின் இலைகளையும், முனைக்குச்சிகளையும் கழித்து முடித்ததும் மொத்தக் குச்சிகளையும் ஒன்றாக்கி, சிறுகட்டாகக் கட்டித் தூக்கிக்கொண்டு நடக்க முயன்றபோது, ஆறுமுகம் குச்சிக் கட்டைத் தானே தூக்கிக்கொண்டு வருவதாகச் சொல்லி அடம்பிடிக்கவே, தன்னுடைய தலையிலிருந்த குச்சிக் கட்டை ஆறுமுகத்தின் தலையில் தூக்கி வைத்தார். பிறகு நொச்சிக் குச்சிகளைத் தேடி அடுத்த இடத்திற்கு இருவரும் நகர்ந்தனர்.

கிழவர் தொடர்ந்து நொச்சியை வெட்டிப் போட்டார். சிதறி விழும் குச்சிகளைப் பொறுக்கியெடுத்து ஒன்றாகச் சேர்த்துக் கொண்டிருந்தான் ஆறுமுகம். ஓயாமல் 'தாத்தாவ் தாத்தாவ்' என்று சில செடிகளையும் கொடிகளையும் மரங்களையும் காட்டிப் பெயர் கேட்டான். பூ எப்படி இருக்கும்? நிறம், வாசனை, காய் எப்படி? பழம் தின்ன முடியுமா? ஓடையைப் பற்றியும், எவ்வளவு தண்ணீர் போகும், எந்த ஊரிலிருந்து வருகிறது, என்னென்ன ஊர்களுக்குப் போகிறது என்பது பற்றியும் கேட்டான். கிழவரும் சளைக்காமல் பதில் சொல்லிக்கொண்டிருந்தார். கிழவர் நொச்சி வெட்ட அலக் கையும், தடியையும், வாங்கையும் எடுத்துக்கொண்டு ஓடைக்கரைக் குள் நடந்து திரிய என்று ஆரம்பித்தாரோ அன்றிலிருந்து இன்று வரை, துணைக்கு என்று அவருடன் ஒருவரும் வந்ததில்லை. ஓடை யைக் கடந்து போக வருபவர்கள் மட்டும் நொச்சி வெட்டும் சத்தம் கேட்டு 'யாருடா அது? என்னத்தீங்கடா வெட்டுறீங்க? காட்டுல மரம் கன்னுன்னு ஒண்ணும் நிக்கப்படாதே. அதெ வெட்டிச்சாச்

சாத்தான் எல்லாப் பயலுக்கும் தூக்கம் வரும்' என்று கிழவரைப் பார்த்துச் சில வார்த்தைகள் பேசிவிட்டுப் போவார்கள். பின்னர் அவரும் ஓடையும்தான். அவ ருடைய ஆயுளில் அவருடன் நொச்சி வெட்ட வந்த முதல் ஆள் ஆறுமுகம்தான்.

வேலை தாமதப்பட்டாலும் கிழவர் ஆறுமுகத்தின் கேள்வி களுக்குப் பதில் சொல்லிக்கொண்டிருந்தார். சளைக்காத, நிற்காத பேச்சுக் கொண்ட வாய் ஆறுமுகத்துக்கு. கேட்கிற கேள்விக்கு ராமன் ஒன்றிரண்டு வார்த்தைகளிலேயே பதில் சொல்லிவிடுவான். அதுவும், 'சரிதான்', 'அப்பறம், சொல்லுங்க'. 'ஒங்க விருப்பங்க'. 'பெரியவங்க நீங்க,' 'பார்க்கலாம்,' 'செய்யலாம்,' 'மாத்தம் என்னிக்குமே வராது' என்பதுபோல் இருக்கும். ஆனால் அவனுடைய தோற்றத்தைப் பார்த்தாலே ஊரில் பெரிய போக்கிரியாக இருக்க வேண்டும் என்று தான் சொல்ல வரும். அவனுடைய மகன்தான் ஆறுமுகம். இவனுக்கு ஒரு இடத்தில் உட்கார, நிற்க முடிகிறதா? ஒரு நிமிசம் வாயைத் திறக்காமல் இருக்க முடிகிறதா? இந்தத் துடுக்குத்தனமும் போக்கிரித் தனமும் இவனுக்கு மட்டும் எப்படி வந்தது? தனபாக்கியம் பெரிய பெண்ணாகும்வரை இந்த மாதிரிதான் ஆடிக்கொண்டும் பாடிக் கொண்டும் இருந்தாள். பிள்ளைகளை அடித்து, கிள்ளி, தரையில் தள்ளிவிட்டு, தலையில் மண்ணை அள்ளிப்போட்டு என்று ஒரு நாளுக்கு ஐந்தாறு சண்டைக்குக் குறையாது. இவள் சும்மா கண்களை மிரட்டுவதுபோல் சுழட்டினால் போதும், அடித்து நொறுக்கியது போல் அழுதுகொண்டு ஓடும் பிள்ளைகள் ஊரில் நிறையவே இருந்தன. நிச்சயதார்த்தம் செய்த அன்றுகூட தனபாக்கியம் பிள்ளைகளை மிரட்டியதாகச் சிலர் வந்து சொன்னார்கள். ஊரிலுள்ள மற்ற இளம் பெண்களைக் கிண்டல் கேலி பரிகாசம் செய்வதுபோல, சீண்டி நோட்டம் பார்ப்பதுபோல இவளிடம் யாராவது செய்தால் வினைதான். லேசில் விடமாட்டாள். உடைத்து ஊருக்கே சொல்லி விடுவாள். ராட்சசி என்று பெயர். கிழவிகள் 'லங்கோடி, தமுக் கடிக்கறாப்ல வாயப் பாரன்' என்பார்கள். 'அவ மடங்கமாட்டாடா' என்பார்கள். ஆறுமுகத்துக்கு உடம்புதான் ராமன் போல. மற்ற தெல்லாம் தனபாக்கியம்தான். கிருஷ்ணாபுரத்திலிருந்து கடைசியாகப் பூத்துறைக்குக் கூட் டிக்கொண்டு வரும்போதுதான் ஆறுமுகத்தைக்

கிழவர் நெருக்கமாகப் பார்த்தார். நெருங்கிப் பார்க்கும்போது, முதலில் சிவஞானமாகவும், பிறகு தனபாக்கியமாகவும் தெரிந்த ஆறுமுகத்தின் செய்கைகளைப் பார்க்கப்பார்க்கக் கிழவருக்கு சிவஞானத்துடன் குடும்பம் பண்ண ஆரம்பித்த நாட்களிலிருந்து, தனபாக்கியம் வளர்ந்தது, கட்டிக்கொடுத்ததுவரை மனதில் படமாக ஓடும்.

ஆறுமுகம் குவித்து வைத்திருந்த குச்சிகளை எடுத்துக் கிழவர் தழை கழிக்க ஆரம்பித்தார். அவன் ஒவ்வொன்றாக எடுத்துக் கொடுத்துக்கொண்டிருந்தான். கிழவருக்குப் பேச்சுக்கு ஆள் இருந்தது பெரும்பலமாக இருந்தது. கறியும் சோறும் கிடைத்ததுபோல் மகிழ்ச்சியாக, புதுத் தெம்பாக இருந்தது. பயிர்க் காலங்களில் மட்டும்தான் ஓடையில் ஆட்களின் நடமாட்டம் அதிகம் இருக்கும். கோடைகாலமென்றால் ஆடுமாடு மேய்ப்பவர்கள் மட்டும்தான் தண்ணீர் தேடி அலைவார்கள். அதுவும் இந்த வவ்வா ஓடையில்தான். மற்ற ஓடைகளில் ஆட்களே இருக்கமாட்டார்கள்.

நொச்சியைத் தேடி ஓடையின் இரு கரைகளிலும் பார்த்தவாறு நடந்தனர். வெயில் சூடுகொள்ள ஆரம்பித்தது. அடைப்புகளிலிருந்த பூச்சிகள், வண்டுகள், குருவிகள், செடிகளுக்கு மேலாக ஓசையெழுப்பி வட்டமடித்துப் பறக்க ஆரம்பித்தன. ஓடையின் இரு கரைகளிலும் மழைக்காலம்போல் பசுமையாக இருந்தது. காற்றில் செடிகொடிகள் மணமும், பூக்களின் மணமும் கலந்திருந்தன.

நாவல் மரத்தை ஒட்டியிருந்த புதரில் நொச்சிச் செடிகள் குத்தாக நின்றிருப்பதைக் கண்டதும் கிழவர் ஆறுமுகத்தை நிறுத்தி, அவனுடைய தலையிலிருந்த குச்சிக்கட்டை இறக்கிவைத்து, அதன் மேல் அவனை உட்காரவைத்துவிட்டு, புதரில் வழிசெய்ய ஆரம்பித்தார். நொச்சிக் குச்சியை வெட்டி எடுக்க இடைஞ்சலாக இருக்கும் இரண்டு மூன்று முள்செடிகளைக்கூட வெட்டியிருக்க மாட்டார். திடீரென்று 'புடிடா புடிடா' என்று கத்திக்கொண்டு ஓடையின் கிழக்குப்பக்க மாக ஓட ஆரம்பித்தார். குச்சிக்கட்டின் மேல் உட்கார்ந்திருந்த ஆறுமுகம் கிழவர் ஏன் கத்திக்கொண்டே ஓடுகிறார்என்பது தெரியாமல் குழம்பித் திகைத்துப்போனான். பிறகு சட்டென்று அவனும் கிழவருக்குப் பின்னாலேயே ஓடத்துவங்கினான். சிறிது தூரத்தில் கரையின் வடக்குப் பக்கமாக பெரிய புதராக இருந்த இடத்திற்குள்

ஆறுமுகம் ஓடிவந்ததைக்கூட கவனிக்காமல் கல்லை விட்டெறிவதி லேயே கிழவர் குறியாக இருந்தார். ஆறுமுகத்தைப் பார்த்ததும் லேசா கச் சிரித்துக்கொண்டே 'பகவான் இன்னிக்கு அதுக்கு நல்லபடி போட்டிருக்கான்' என்றவர் திரும்பி நடக்க ஆரம்பித்தார். 'என்னா?' என்று கேட்ட ஆறுமுகத்திடம் நொச்சி வெட்ட வழிசெய்த புதரிலிருந்து ஓடிப்போன முயல்களைப்பற்றி சொன்னார். அதோடு பெரிய முயல்கள் எத்தனை என்றும், அவற்றின் நிறம், ஓடும் வேகம், காலடித் தடம், கறியின் ருசி பற்றியெல்லாம் சொல்லிக்கொண்டே குச்சிக்கட்டுக் கிடந்த இடத்திற்கு வந்தார். குச்சிக்கட்டின்மேல் ஆறுமுகம் உட்கார்ந்ததும் மீண்டும் சென்று புதரில் நொச்சி வெட்ட வழிசெய்ய ஆரம்பித்தார். ஆறுமுகம் கிழவரையே பார்த்தான். கிழவரால் சத்தம் போட்டுக் கத்த முடியும், வேகமாக ஓட முடியும் என்பதை அவனால் நம்ப முடிய வில்லை. ஏனென்றால் இதுவரை அவன் கிழவர் ஓடியோ சத்தம் போட்டோ பார்த்ததில்லை. முயல்களைத் துரத்தியவாறு கிழவர் ஓடியது பற்றியே நினைத்துக்கொண்டு உட்கார்ந்திருந்தான். சிறிது நேரம்கூட கழிந்திருக்காது. 'த்தூ த்தூ, ச்சி ச்சி, த்தூ' என்று கத்திக்கொண்டு தன்னைச் சுற்றி வட்டமிட்டுப் பறக்கும் இருபதுக்கும் மேற்பட்ட குளவிகளை விரட்டிக்கொண்டே கிழவர் ஆறுமுகத்திடம் ஓடிவந்தார். குளவிகளை மோசமாகத் திட்டிக் காறிக்காறி உமிழ்ந்துவிட்டு வீங்கியிருந்த இடங்களில் எச்சில் வைத்து உருவித் தேய்த்துவிட அரம்பித்தார். கிழவரைச் சுற்றியும், தலைக்கு மேலாகவும் வட்டமிட்டுப் பறக்கும் குளவிகளின்மேல் ஆறுமுகம் மணலை வாரிவாரி அடித்தான். குளவிகள் கொட்டியதால் வீங்கித் தடித்திருந்த இடங்களில் தன்னுடைய எச்சிலை எடுத்துவைத்து உருவித் தேய்த்துவிட ஆரம்பித்தான். கிழவர் வலியை மறந்து ஆறுமுகத்தைத் தன் அடிவயிற்றுடன் இழுத்து நிறுத்திக்கொண்டார். அவர் கண்களில் நீர் திரண்டு நின்று ஓடையை மறைத்தது. ஆறுமுகம் கிழவருடன் மேலும் நெருக்கமாக இணைந்து நின்றான். அவ்வாறு நிற்பது அவனுக்குச் சந்தோசமாகவும் சிரிப்பாகவும் இருந்தது.

குளவிக் கூண்டை அலக்கால் தட்டிவிட்டு, கிழவர் மீண்டும் நொச்சிக்குச்சி வெட்டிப் போட ஆரம்பித்தார். கிழவர் வெட்டிப் போட, மணலில் வந்து விழும் குச்சிகளை ஆறுமுகம் ஒன்றாகக் குவித்துக்கொண்டிருந்தான்.

ஆறுமுகத்தைச் சிறிது நேரம்தான் தழை கழிக்க விட்டார். 'நீ பேசாம இரு. கையில வெட்டிக்குவ. வெரலு துண்டாயிடும். அப்பறம் ஒங்கம்மாக்காரிக்கு என்னால பதில் சொல்ல முடியாது. வாண்டாம் வுடு. வாங்க இப்பிடிக் காட்டு' என்று வாங்கைப் பிடுங்கித் தானே தழையை வேகவேகமாகக் கழிக்க ஆரம்பித்தார். அவ்வப்போது 'பசிக்குதா, என்னா பண்ணுது? கொடல முறுக்குதா? பசியாக் கெடந்தா ஒடம்புக்கு நல்லதுதான்' என்று பேச்சுக்கொடுத்துக்கொண்டே யிருந்தார் எல்லாக் குச்சிகளையும் ஒரே கட்டாகக் கட்டினார். 'அவ்வளவுதானா?' என்று கேட்ட ஆறுமுகத்திடம் 'பொயிதாச்சு. நாளக்கி வெட்டிக்கலாம். கௌம்பு. பொயிது எம்மானோதான் ஆயிப் போச்சு' என்று சொல்லி, குச்சிக்கட்டைத் தலையில் தூக்கிக்கொண்டு அலக்கைத் தோளில் வைத்துக்கொண்டு முன்னே நடக்க ஆரம்பித்தார். வாங்கை எடுத்துக்கொண்டு ஆறுமுகம் கேட்டான்:

'இந்தப் பாத நேரா ஊட்டுக்குத்தான் போவுதா?'

'ஆமாம்.'

'இதுலியே திரும்பிப் போனா?'

'காட்டுக்குப் போவும்.'

'எல்லாக் காட்டுக்குமா?'

'ஆமாம்.'

'நம்ப காட்டுக்கும் போவுமா?'

'நம்பளுக்கு காடு இல்ல.'

'ஏன் இல்ல?'

'இல்ல.'

'ஒன்னால வாங்க முடியாதா?'

'எப்பிடி முடியும்? முடியுற மாரி இருந்தா அப்பறம் என்னா இருக்கு?'

'அப்பன்னா நான் வாங்குறன்.'

'எப்படி வாங்குவ?'

'பெரிய ஆளா ஆனதும் நான் நெறய காடு வாங்குவன்.'

'நெசமாவா?'

'சத்தியமா? செங்கேணியம்மா சாமிமேல சத்தியம்.'

'கிருஷ்ணாபுரத்தாரெ உண்டானபோது கோடான கோடி

தான். 'மணப்பார மானாமதுர, நாளய பந்தயத்துல ஓடும் பாரு வெள்ளக்குதிர'ங்கற மாரியா? இப்பிடித்தான் ஒரு ஊர்ல ஒரு ஆளு இருந்தான். அவனுக்கு என்னாச்சின்னா...' என்று பேச ஆரம்பித்த கிழவருக்கு வீடு வரும்வரை பேச்சு நிற்கவில்லை.

## 3

கிழவர் நினைத்ததுபோல் எல்லாக் காரியங்களும் நடந்தன. இரண்டு வாரமாகக் கொண்டுவந்து சேர்த்த குச்சிகளை வைத்து, அவருடைய இயல்புக்கும் வழக்கத்துக்கும் மாறாக மூன்றே நாளில் நாற்பது கூடைகளைப் பின்னி முடித்தார். வேலைகள் சீக்கிரமாக நடந்ததற்குக் காரணம் தனபாக்கியமும் ஆறுமுகமும்தான். ஓடையிலிருந்து வெட்டியெடுத்து வந்த குச்சிகளைப் பதமாகக் காய வைத்தனர். சாயங்காலம் கட்டுக்கட்டாகக் கட்டி வைத்தனர். பதமாகத் தண்ணீர் தெளித்து வைத்தனர். மூன்றாம் நாள் வெயில் படாத இடமாகப் பார்த்துக் காயவைத்துப் பதப்படுத்தி வைத்தனர். கிழவரும் விடிவதற்கு ஒரு சாமப்பொழுது இருக்கும்போதே குச்சிக்குப் போய்விடுவார். ஒரு நாளைக்கு வவ்வா ஓடைக்குப் போனாரென்றால் மறுநாள் ஊருக்குத் தெற்கேயுள்ள வெள்ளைக்காரன் ஓடைக்கும், பங்களாமேடு, சாமியார் பங்களா ஓடைகளுக்கும் போவார். அதற்கடுத்த நாள் குளத்துக்காரன் சாவடி, ஊத்துக்குட்டை மூலை, எலிக்குஞ்சு சாலை, கன்னியங்கரை, மலமேடு, கனகராணிபேட் ஓடைகளுக்குப் போவார். ஒரு நாள் போன ஓடைக்கு மறுநாள் போகமாட்டார். கிழவருக்கு அதிகமாக நொச்சிக்குச்சி கிடைப்பது ஊத்துக்குட்டை மூலையிலும் வவ்வா ஓடையிலும்தான். ஓடையிலிருந்து வந்ததும் சாப்பிட்டு முடித்ததுமே கூடை பின்ன உட்கார்ந்துவிடுவார். கிழவருக்குக் கூடை பின்னுவதில் திடீரென்று எப்போதுமில்லாமல் ஒரு சந்தோசம் ஏற்பட்டிருந்தது. முன்புபோல் கூடைகளுக்குக் கிராக்கியில்லை. ஊரில் மாடுகள் அதிகமில்லை, அதனால் சாணிகளும்